# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2018 மார்ச் மாதம் 28ம் தேதி புதன்கிழமை காலை 11.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை.. திருமதி சா.லெட்சுமி, M.Com.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**

**கூட்ட பொருள்கள்**

**பொருள் எண்—01**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கட்டண கழிப்பறையினை மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு நல்லமுறையில் முடிவுற்றது. மேற்படி கட்டண கழிவறையில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள செப்டிக் டேங்க் மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளதால், மலக்கழிவுகள் நேரடியாக வெளியே செல்லும் நிலையில் உள்ளது. மேலும் மின் வசதிகள் மற்றும் இதர கூடுதல் வசதிகள் மேற்கொள்ள கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தல ஆய்வின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பேருந்து நிலைய மேற்குபுறத்தில் புதியதாக பேருந்துகள் நிற்பதற்கான மேடை அமைக்கப்பட வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.980000/—(ரூபாய் ஒன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்)—க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பொதுமக்களின் நலன்கருதி பணியினை தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 535/2018/இ1

**பொருள் எண்—02**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 21ல் உள்ள புல எண் 328/6எ1, 328/7எல் அமைந்துள்ள அனுமதியற்ற ஸ்ரீ சக்தி நகர் மனைப்பிரிவில் உள்ள 36 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ இ(வி.மா) எண் 78/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் உள்ள பூங்காவினையும், சாலையினையும் இந்நகராட்சி ஆவண எண் 946/2018ன் மூலம் தான செட்டில்மென்ட் எழுதி கொடுத்துள்ளார். கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடமும், தானசெட்டில்மென்ட் ஆவணமும் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கான வரன்முறைப்படுத்துல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் செலுத்திய பின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ1/2721/2017

**பொருள் எண்—03**

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 21ல் உள்ள புல எண் 341/9 பகுதி, 341/11பகுதி ல் அமைந்துள்ள அனுமதியற்ற கே.கே.ஆர் ஸ்ரீ ஜெயசக்தி நகர் மனைப்பிரிவில் உள்ள 17 மனைகளுக்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அரசாணை எண் 78 மற்றும் 172ன்படி கொ.ஒ.ம.வ./ந.ஊ.உ இ(வி.மா) எண் 77/2018 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் உள்ள பூங்காவினையும், சாலையினையும் இந்நகராட்சி ஆவண எண் 945/2018ன் மூலம் தான செட்டில்மென்ட்

எழுதி கொடுத்துள்ளார். கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள வரைபடமும், தானசெட்டில்மென்ட் ஆவணமும் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கான வரன்முறைப்படுத்துல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் செலுத்திய பின் மனைகளை வரன்முறைப்படுத்தி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ1/2721/2017

## பொருள் எண் – 04

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 11 வரையுள்ள பகுதிகளில் பொது மக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும்பொருட்டு, விசைப்பம்ப்கள், சிறுமின் விசை பம்ப்கள், இதர மோட்டார்கள் மற்றும் கைப்பம்ப்களில் ஏற்படும் அனைத்து பழுதுகளையும், உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும், இதற்காக 2018–2019ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.995000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூற்று ஐந்தாயிரம் மட்டும்)–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோக அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்
3. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 658/2018/இ1

## பொருள் எண் – 05

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 12 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் பொது மக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும்பொருட்டு, விசைப்பம்ப்கள், சிறுமின் விசை பம்ப்கள், இதர மோட்டார்கள் மற்றும் கைப்பம்ப்களில் ஏற்படும் அனைத்து பழுதுகளையும், உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும், இதற்காக 2018–2019ம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.995000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூற்று ஐந்தாயிரம் மட்டும்)–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோக அவசர, அவசியத்தினை கருத்தில் கொண்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்
3. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 658/2018/இ1

## பொருள் எண் – 06

கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்படும் வாகன எண் TN 32 AV 0727 (JCB) இயந்திரத்திற்கு பழுதுகளை நீக்கம் செய்யவும், ஜேசிபி இயந்திரத்தின் முன் சிறிய சக்கரம், பின் பெரிய சக்கரங்களை புதியதாக மாற்றம் செய்யவும் உள்ளூர்/வெளியூர் பணிமனைகளில் விலைப்புள்ளி கோரவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 543/2018/அ4

## பொருள் எண் – 07

கள்ளக்குறிச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்படும் வாகன எண் TN 32 AV 0727 (JCB) இயந்திரத்திற்கு பழுதுகளை நீக்கம் செய்யவும், ஜேசிபி இயந்திரத்தின் முன் சிறிய சக்கரம், பின் பெரிய சக்கரங்களை புதியதாக மாற்றம் செய்யவும் உள்ளூர்/வெளியூர் பணிமனைகளில் விலைப்புள்ளி கோரவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்னனுமதி பெற்று 21.03.2018 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளை கீழ்க்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

வேலையின் பெயர் 1) நகராட்சி ஜேசிபி TN 32 AV 0727 வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்யும் பணி

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| **1** | **M.R. மார்கோ இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சேலம்** | **189665** |
| 2 | சபரி இன்டஸ்டரிஸ், கள்ளக்குறிச்சி | 205910 |
| 3 | ஸ்ரீபண்ணை அம்மன் டிரெய்லர்ஸ் ஒர்க்ஸ், கள்ளக்குறிச்சி | 208978 |

வேலையின் பெயர் 2) நகராட்சி ஜேசிபி TN 32 AV 0727 வாகனத்திற்கு புதியதாக முன் சிறிய சக்கரம், பின் பெரிய சக்கரம் மாற்றும் பணி

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| 1 | சிவசக்தி டயர்ஸ், கள்ளக்குறிச்சி | 72300 |
| **2** | **எஸ்.கே.ஆர்.டயர்ஸ், கள்ளக்குறிச்சி** | **72000** |
| 3 | ஸ்ரீசண்முகா டயர்ஸ், கள்ளக்குறிச்சி | 72600 |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணி எண் 1க்கு வ.எண் 1ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள '' **M.R. மார்கோ இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சேலம்**'' என்ற நிறுவனத்திற்கு விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணி எண் 2க்கு வ.எண் 2ல் உள்ள குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ''எஸ்.கே.ஆர். டயர்ஸ், கள்ளக்குறிச்சி'' என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. பட்டியல் தொகையி நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 543/2018/அ4

## பொருள் எண் – 08

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் 07.02.2018ம் தேதிய நேரடி ஆய்வில் கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் 2017ம் ஆண்டு அளவிற்கு டெங்கு நோய்களின் அளவை வர விடாமல் தற்போது உடன் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை அமர்த்தி பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தியதற்கிணங்க இந்நகராட்சி பகுதியில் 10 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை பணிக்கு அமர்த்தி பணி மேற்கொள்ளவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 15.02.2018 முதல் பணி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணி மேற்கொண்டு பட்டியல் கிடைக்கப்பெற்றவுடன் ராசி மகளிர் சுயஉதவிக்குழுவிற்கு காசோலை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 215/2018/அ4

## பொருள் எண் – 09

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார வாகனம் எண் **TN 32 AV 1335** க்கு டயர்கள் மற்றும் டியூப்கள் வாங்குவதற்கு உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| **1** | **M.R.F.Exclusive துருகம் ரோடு, கள்ளக்குறிச்சி** | **58000** |
| 2 | களஞ்சியம் ஏஜென்சீஸ், துருகம் மெயின்ரோடு, கள்ளக்குறிச்சி | 59300 |
| 3 | கவின் டயர்ஸ், சென்னை மேயின்ரோடு, கள்ளக்குறிச்சி | 65900 |

அலுவலகக் குறிப்பு

1. TN 32 AV 1335 வாகனத்திற்கு டயர்கள், டியூப்கள் மாற்ற 3 நிறுவனங்களில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள MRF Exclusive துருகம் ரோடு, கள்ளக்குறிச்சி அவர்களிடம் டயர்கள், டியூப்கள் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. அதற்கான பட்டியல் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 361/2018/அ4

## பொருள் எண் –10

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 82ன் படி நியாயமான வருடாந்திர வாடகையின் அடிப்படையில், நகராசியால் சொத்து வரியானது விதிக்கப்படுகிறது. மேலும், வரிவிதிப்பு விதி 6–A படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டிதலின்படி, சொத்து வரியினை நிர்ணயம் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள்(இரண்டாம் திருத்தம்) சட்டம் – 2018, (2018 தமிழ்நாடு சட்டம் 6)–ல் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி) க்கு கீழ்க்கண்டவாறு சட்டத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

**AMENDMENTS TO THE TAMILNADU DISTRICT MUNICIPALITIES ACT, 1920**

**5. In Section 83 of the Tamil Nadu District Municipalities Act, 1920, in Sub-Section (1)**

(1)

(1) for clause (c), the following clause shall be substituted, namely:-

“(c) buildings used for educational purpose including hostels and libraries, run by the Government or Municipality or any other local authority or institutions aided by the Government and buildings used for charitable purpose sheltering the destitute or animals and orphanages, homes and schools for the deaf and dumb, asylum for the aged and fallen women and such similar institutions run purely on philanthropic lines as are approved by the council:

Provided that the buildings used for educational purpose by the Government aided institutions for conducting self-financing courses shall be subject to levy of property tax;”:

(2)in the proviso, for the Expression “ clauses (a), (c) and (e)” shall be substituted.

மேற்படி சட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் மீது சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் மற்றும் அரசின் உதவி பெற்று செயல்பட்டு வரும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வருமாயின் அக்கட்டிடங்கள் மீது சொத்து வரி விதிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்,

1. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரிவிதிக்கவும்,
2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 83(1) (சி) ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனங்கள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும்பட்சத்தில் அந்நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்,
3. கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடங்கள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவிபெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனங்களின் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்து வரி விகிதத்தில் 1.5 மடங்கு சொத்து வரியாக விதிக்கவும்.
4. தமிழ்நாடு மாவட்ட நகராட்கிள் சட்டம் 1920, பிரிவு 83(1) (சி)ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–2018 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து, மேற்படி கடடிடங்களுக்கு சொத்துவரி விதிக்கவும்,
5. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 78(3)ன்படி, ஆட்சேபணைகளை அளிப்பதற்காக ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கும் மற்றும் அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 78(3)ன்படி மேற்கண்ட முறையில் சொத்துவரி விதிப்பு செய்ய, அறிவிப்பு செய்து, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 நாட்களுக்கு பின்னர், சொத்துவரி விதிப்பினை மேற்கொள்வது குறித்து இறுதி செய்யலாம்.
3. ஒரு தமிழ் நாளிதழில் அறிவிப்பு வெளியிடுவதற்கு ஆகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.708/2018/அ2)**

## பொருள் எண்–11

கள்ளக்குறிச்சி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் TN32AV2277ன் 1,20,352கி.மீ மேல் ஓடி உள்ளதால் வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ், 4 வீல் பிரேக் வேலை மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவும் வாகனத்தின் தயாரிப்பு நிறுவனமான சேலம் S.K.S.ஆட்டோ மொபைல்ஸ் என்ற நிறுவனத்தில் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினமாக ரூ.25,000/– (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். அ4/580/2018 )**

## பொருள் எண்–12

அரசு ஆணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (ந.நி.4) நாள் 03.07.2007ல் தெரிவித்துள்ளபடி நகராட்சி கடைகளின் குத்தகை உரிமம் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் மாத வாடகையில் உயர்வு செய்து கேட்பில் நிர்ணயிக்கப்பட வேண்டும். அதன்படி இந்நகராட்சியில் கீழ்க்கண்ட விபரப்படி உள்ள கடைகள் முதல் புதுப்பித்தல் காலம் 31.03.2018ல் முடிவடைவதால் 01.04.2018 முதல் இரண்டாம் காலம் 15 சதவீதம் புதுப்பித்து உயர்வு செய்யப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1) | தினசரி நாளங்காடி கடைகள் எண்ணிக்கை | (1 முதல் 108 வரை) | 108 |
| 2) | தினசரி நாளங்காடி மேற்குபுற பொது நிதிகடைகள் | (1 முதல் 9 வரை) | 9 |
| 3) | தினசரி நாளங்காடி தற்காலிக பூக்கடை | (1 முதல் 8 வரை) | 8 |
| 4) | தினசரி நாளங்காடி தற்காலிக வெற்றிலை கடை | ( 1 முதல் 7 வரை) | 7 |
| 5) | தினசரி நாளங்காடி தற்காலிக பழக்கடைகள் | (1 முதல் 14 வரை) | 14 |
| 6) | தினசரி நாளங்காடி தற்காலிக நடுத்தர கடைகள் | (1 முதல் 43 வரை) | 43 |
| 7) | தினசரி நாளங்காடி தற்காலி மேடைக்கடைகள் | ( 1 முதல் 20 வரை) | 20 |
| 8) | தினசரி நாளங்காடி தற்காலிக சிறியக்கடைகள் | ( 1 முதல் 31 வரை) | 31 |
| 9) | பேருந்து நிலைய வெளிப்புற கடைகள் | ( 1 முதல் 26 வரை) | 26 |
| 10) | பேருந்து நிலைய கடைகள் | ( 1 முதல் 39 வரை) | 39 |
| 11) | பேருந்து நிலைய நேரக்காப்பாளர் அறை (ஏடிசி த.அ.போ.க)–1 | | 1 |
| 12) | காதிகிராப்ட் கடைகள் | ( 1 முதல் 2 வரை) | 2 |
| 13) | பேருந்து நிலைய எடைபார்க்கும் இயந்திரம் 2 | | 2 |
| | ஆக மொத்த கடைகள் | | 310 |

மேற்காணும் விபரப்படி உள்ள கடைகளுக்கு **01.04.2018** முதல் **15** சதவீதம் உயர்வு செய்ய வேண்டி அதற்கான அறிவிப்பு வழங்கி உரிய விண்ணப்பம் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. **31.03.2018**க்குள் விண்ணப்பம் பெற வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் அனுமதியை எதிர்நோக்கி முன் அனுமதிபெற்று புதுப்பித்தல் விண்ணப்பம் பெற்றதையும், அதற்கான தொகை ரூ.**500/–** பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டதையும் தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்

ந.க.எண் /2018/அ1

## பொருள் எண்–13

கள்ளக்குறிச்சி நகராட்சியில் 01.04.2018 முதல் 31.03.2021 வரை உள்ள காலத்திற்கான ஆண்டு குத்தகை இனமான, **பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறை கட்டணம் வசூலிக்கும்** உரிமத்திற்கான குத்தகை உரிமத்தை அனுபவித்து கொள்ள, 27.02.2018-ந் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், திரு. டி.சுரேஷ் த/பெ துரை, கள்ளக்குறிச்சி என்பவர் ஓராண்டிற்கான குத்தகை தொகையை ரூ 10,95,000/-க்கு ஏலம் கோரியுள்ளதை, தீர்மானம் எண். 208/2018 நாள். 28.02.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண். 311/2017/அ2 நாள். 05.03.2108 மற்றும் 19.03.2018ன் மூலம் முழுத் தொகையினையும் செலுத்திட குத்தகைதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. மேற்படி குத்தகைதாரர் இவ்வலுவலகத்தில் 20.03.2018ல் நகராட்சி அலுவலக கரூவூலக பற்றுச் சீட்டு எண். 042/KL1/17-18/0020865-ல் ரூ. 6,00,000/- (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்)–மும், 28.03.2018ல் பற்று சீட்டு எண். 042/KL1/17-18/0022310-ல் ரூ. 2,00,000/-ம் ஆக மொத்தம் ரூ. 8,00,000/- மட்டும் செலுத்தியுள்ளார். மேலும், குத்தகைதாரர் குத்தகையினத்திற்கான குத்தகை தொகையானது அதிகபட்ச தொகையாக இருப்பதால், முழு தொகையையும் செலுத்திட வழிவகை இயலாத நிலையில் உள்ளதால், மீதமுள்ள தொகை ரூ. 2,95,000/-ஐ மூன்று மாத காலத்திற்குள் (30.06.2018-க்குள்) செலுத்திவிடுவதாக கடிதம் கொடுத்துள்ளார். மேலும், குத்தகை காலமானது 31.03.2018 உடன் முடிவடைவதாலும், மறு ஏலம் கோரி வேறு நபருக்கு விட குறுகிய நாட்களே உள்ளதாலும், மேலும் மறு ஏலம் கோரும்பட்சத்தில் இவ்வளவு அதிக தொகைக்கு ஏலம் போகுமா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளதாலும், குத்தகை கோரிய நபர் குத்தகையில் பாதி தொகைக்கும் மேல் ரூ. 8,00,000/-ஐ செலுத்தி விட்டதாலும், மீத தொகையினை 3 மாத காலத்திற்குள் (30.06.2018-க்குள்) செலுத்தி விடுவதாகவும், தொகை செலுத்தத பட்சத்தில் நகராட்சியால் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு கட்டுப்படுவதாகவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளதை தொடர்ந்து மேற்காணும் நபருக்கு ஏலத்தினை உறுதி செய்து உத்தரவு வழங்கலாம். மேலும், உத்தரவில் 3 மாத காலத்திற்குள் மீதி தொகையினை செலுத்தவும் அறிவுறுத்தலாம். தவறும் பட்சத்தில் குத்தகை விதிகளின்படி குத்தகை உரிமத்தினை ரத்து செய்து, அவரது வைப்புத்தொகை

மற்றும் கட்டிய தொகையினை பறிமுதல் (Forfeit) செய்து மறு ஏலம் கோரிட தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3111 / 2017 / அ2)**

## பொருள் எண்–14

கள்ளக்குறிச்சி நகராட்சியில் 01.04.2018 முதல் 31.03.2021 வரை உள்ள காலத்திற்கான ஆண்டு குத்தகை இனமான, **நாளங்காடி / சாலையோர கடைகளில் சுங்கம் வசூல் செய்யும்** உரிமத்திற்கான குத்தகை உரிமத்தை அனுபவித்து கொள்ள, 27.02.2018-ந் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், திரு. கே.முருகேசன் த/பெ காசிநாதன், கள்ளக்குறிச்சி என்பவர் ஓராண்டிற்கான குத்தகை தொகையை ரூ 55,05,000/-க்கு ஏலம் கோரியுள்ளதை, தீர்மானம் எண். 208/2018 நாள். 28.02.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண். 311/2017/அ2 நாள். 05.03.2108 மற்றும் 19.03.2018ன் மூலம் முழுத் தொகையினையும் செலுத்திட குத்தகைதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. மேற்படி குத்தகைதாரர் இவ்வலுவலகத்தில் 26.03.2018ல் நகராட்சி அலுவலக கரூவூலக பற்றுச் சீட்டு எண். 042/KL1/17-18/0021841-ல் ரூ.25,00,000/- (ரூபாய் இருபத்தி ஐந்து இலட்சம் மட்டும்) செலுத்தியுள்ளார். மேலும், குத்தகைதாரர் குத்தகையினத்திற்கான குத்தகை தொகையானது 2015-2017ல் ஓராண்டிற்கு ரூ. 23,22,916/- ஆகும். ஆனால் தற்போது 2018ம் ஆண்டு குத்தகை தொகை ரூ. 55,05,000/- ஏறக்குறைய 2 மடங்கு அதிகமாக கோரியுள்ளதாகவும், மேற்படி தொகையானது அதிகபட்ச தொகையாக இருப்பதால், முழு தொகையையும் ஒரே தவணையில் செலுத்திட வழிவகை இல்லை எனவும், மீதமுள்ள தொகை ரூ. 30,05,000/-ஐ மூன்று மாத காலத்திற்குள் (30.06.2018-க்குள்) செலுத்திவிடுவதாக 26.03.2018 அன்று கடிதம் கொடுத்துள்ளார். மேலும், குத்தகை காலமானது 31.03.2018 உடன் முடிவடைவதாலும், மறு ஏலம் கோரி வேறு நபருக்கு விட குறுகிய நாட்களே உள்ளதாலும், மேலும் மறு ஏலம் கோரும்பட்சத்தில் இவ்வளவு அதிக தொகைக்கு ஏலம் போகுமா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளதாலும், குத்தகை கோரிய நபர் குத்தகையில் பாதி தொகையினை ரூ. 25,00,000/-ஐ செலுத்தி விட்டதாலும், மீத தொகையினை 3 மாத காலத்திற்குள் (30.06.2018-க்குள்) செலுத்தி விடுவதாகவும், தொகை செலுத்தத பட்சத்தில் நகராட்சியால் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு கட்டுப்படுவதாகவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளதை தொடர்ந்து மேற்காணும் நபருக்கு ஏலத்தினை உறுதி செய்து உத்தரவு வழங்கலாம். மேலும், உத்தரவில் 3 மாத காலத்திற்குள் மீதி தொகையினை செலுத்தவும் அறிவுறுத்தலாம். தவறும் பட்சத்தில் குத்தகை விதிகளின்படி குத்தகை உரிமத்தினை ரத்து செய்து, அவரது வைப்புத்தொகை மற்றும் கட்டிய தொகையினை பறிமுதல் (Forfeit) செய்து மறு ஏலம் கோரிட தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3111 / 2017 / அ2)**

## பொருள் எண்–15

கள்ளக்குறிச்சி நகராட்சியில் 01.04.2018 முதல் 31.03.2021 வரை உள்ள காலத்திற்கான ஆண்டு குத்தகை இனமான, **பேருந்து நிலையத்தில் உள்ள இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும்** உரிமத்திற்கான குத்தகை உரிமத்தை அனுபவித்து கொள்ள, 27.02.2018-ந் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், திரு. எம்.செந்தில்குமார், கள்ளக்குறிச்சி என்பவர் ஓராண்டிற்கான உயர்ந்த பட்ச குத்தகை தொகை ரூ 2,85,000/-க்கு ஏலம் கோரியுள்ளதை, தீர்மானம் எண். 208/2018 நாள். 28.02.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண். 311/2017/அ2 நாள். 05.03.2108 மற்றும் 19.03.2018ன் மூலம் முழுத் தொகையினையும் செலுத்திட குத்தகைதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. மேற்படி குத்தகைதாரர் இவ்வலுவலகத்தில் 20.03.2018ல் நகராட்சி அலுவலகத்தில் ரூ. **2,85,000**/- (ரூபாய் இரண்டு இலட்சத்து என்பத்தைந்தாயிரம் மட்டும்) மட்டும் செலுத்தியுள்ளார். மேலும், குத்தகைதாரர் **2018-2019** ம் ஆண்டிற்கான குத்தகையினத்திற்கான குத்தகைதொகை முழுவதும் செலுத்தியுள்ளார் அதனை தொடர்ந்து மேற்காணும் நபருக்கு ஏலத்தினை உறுதி செய்து உத்தரவு வழங்கலாம். தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3111 / 2017 / அ2)**

## பொருள் எண்–16

கள்ளக்குறிச்சி நகராட்சியில் 01.04.2018 முதல் 31.03.2021 வரை உள்ள காலத்திற்கான ஆண்டு குத்தகை இனமான, **பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும்** உரிமத்திற்கான குத்தகை உரிமத்தை அனுபவித்து கொள்ள, 27.02.2018-ந் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், திரு. இ.கண்ணன் த/பெ ஏழுமலை, கள்ளக்குறிச்சி என்பவர் ஓராண்டிற்கான குத்தகை தொகையை ரூ 17,45,000/-க்கு ஏலம் கோரியுள்ளதை, தீர்மானம் எண். 208/2018 நாள். 28.02.2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண். 311/2017/அ2 நாள். 05.03.2108 மற்றும் 19.03.2018ன் மூலம் முழுத் தொகையினையும் செலுத்திட குத்தகைதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. மேற்படி குத்தகைதாரர் இவ்வலுவலகத்தில் 24.03.2018ல் நகராட்சி அலுவலக கருவூலக பற்றுச் சீட்டு எண். 042/KL1/17-18/0021682-ல் ரூ. 10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மட்டும் செலுத்தியுள்ளார். மேலும், குத்தகைதாரர் குத்தகையினத்திற்கான குத்தகை தொகையானது அதிகபட்ச தொகையாக இருப்பதால், முழு தொகையையும் செலுத்திட வழிவகை இயலாத நிலையில் உள்ளதால், மீதமுள்ள தொகை ரூ. 7,45,000/-ஐ மூன்று மாத காலத்திற்குள் (30.06.2018-க்குள்) செலுத்திவிடுவதாக கடிதம் கொடுத்துள்ளார். மேலும், குத்தகை காலமானது 31.03.2018 உடன் முடிவடைவதாலும், மறு ஏலம் கோரி வேறு நபருக்கு விட குறுகிய நாட்களே உள்ளதாலும், மேலும் மறு ஏலம் கோரும்பட்சத்தில் இவ்வளவு அதிக தொகைக்கு ஏலம் போகுமா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளதாலும், குத்தகை கோரிய நபர் குத்தகையில் பாதி தொகைக்கும் மேல் ரூ. 10,00,000/-ஐ செலுத்தி விட்டதாலும், மீத தொகையினை 3 மாத காலத்திற்குள் (30.06.2018-க்குள்) செலுத்தி விடுவதாகவும், தொகை செலுத்தத பட்சத்தில் நகராட்சியால் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு கட்டுப்படுவதாகவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளதை தொடர்ந்து மேற்காணும் நபருக்கு ஏலத்தினை உறுதி செய்து உத்தரவு வழங்கலாம். மேலும், உத்தரவில் 3 மாத காலத்திற்குள் மீதி தொகையினை செலுத்தவும் அறிவுறுத்தலாம். தவறும் பட்சத்தில் குத்தகை விதிகளின்படி குத்தகை உரிமத்தினை ரத்து செய்து, அவரது வைப்புத்தொகை மற்றும் கட்டிய தொகையினை பறிமுதல் (Forfeit) செய்து மறு ஏலம் கோரிட தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3111 / 2017 / அ2)**

## பொருள் எண்–17

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தமிழ்நாடு அரசு சார்பில் அரசு நலத்திட்டங்கள், அரசின் சாதனைகள் குறித்து ஓராண்டு சாதனை மலராக கீழ்க்காணும் தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பிரசுரம் செய்யப்பட்ட நாளிதழ் | பட்டியல் எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | எக்ஸ்பிரஸ் பப்ளிகேஷன்ஸ் லிட். (தினமணி) | VPMTN90012691 / 15.03.2018 | 15750.00 |

மேற்காணும் விபரப்படி தினசரி நாளிதழுக்கான ஓராண்டு சாதனை மலரினை பிரசுரம் செய்யப்பட்டதற்கான பட்டியலில் கண்டுள்ள தொகையினை வழங்கிட தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 424 / 2018 / இ1)**

## பொருள் எண்–18

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 11 வரையுள்ள பகுதிகளில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு, விசைப்பம்புகள், சிறுமின் விசைப்பம்புகள், இதர மோட்டார்கள் மற்றும் கைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்வதற்கு, 2017-2018-ம் ஆண்டிற்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண். 09/2017 நாள். 28.02.2017ல் ரூ. 10.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது, மேற்கண்ட பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை தற்பொழுது முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும், 2018-2019-ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், மேற்படி பணிக்கு தற்போது கூடுதலாக ரூ. 3,50,000/- (ரூபாய் மூன்று இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோக அவசர, அவசியத்தினை கருதி ஏற்கனவே பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்கள் மூலமே மேற்கொள்ளவும், அதற்கான தொகையினை வழங்கிடவும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 267 / 2017 / இ1)**

## பொருள் எண்–19

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு **□ ய்மை □கிஙியா ஙிட்ட□, ஒரு□□ணைகித ஙிட□க□□ மேலாண்மை ஙிட்ட□ 2016-2017**ன் கீழ், நுண்ணுயிரி உரம் தயாரிப்பதற்கான கட்டுமான பணிகள் மேற்கொள்வதற்கு, ஏற்கனவே 24.01.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறாததால், மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை மாவட்ட அளவில் ஒரு தமிழ் தினசரி நாளிதழ் *(District Edition)*-ல் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை அவர்களின் மூலமாக பிரசுரம் செய்ய கோரப்பட்டதில், 26.01.2018 அன்று தினமணி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ. 2,835/-ஐ வழங்கக் கோரி M/s. கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாரின் பட்டியல் எண். 2462 நாள். 27.01.2018ல் பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொகையினை M/s. கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாருக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1762 / 2016 / அ4)**

## பொருள் எண்–20

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்தரவு ந.க.எண். 29660/P3/2016 நாள். 30.11.2017-ல் கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு **□ ய்மை □கிஙியா ஙிட்ட□, ஒரு□□ணைகித ஙிட□க□□ மேலாண்மை ஙிட்ட□ 2016-2017**ன் கீழ், நுண்ணுயிரி உரம் தயாரிப்பதற்கான கட்டுமான பணிகள் மேற்கொள்வதற்கு, நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, பணியினை மேற்கொள்ளப்பட்டது. மேற்காணும் பணிகளை மேற்கொள்ள அந்தப்பகுதியில் வசிக்கும் குடியிருப்புதாரர்களால் ஆட்சேபனை தெரிவித்துள்ள நிலையில், பொதுமக்களால் வழக்குகள் தொடராவண்ணம், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கேவிட் மனு பதிவு செய்வதற்கு, திரு. எஸ்.சுபாஷ்சந்திரன், அரசு கூடுதல் வழக்கறிஞர், கள்ளக்குறிச்சி அவர்களின் மூலமாக கேவிட் மனு தாக்கல் செய்தமைக்கான கட்டணம் ரூ. 15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)–ஐ வழங்க கோரி வரப்பெற்ற கடிதம் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1762 / 2016 / அ4)**

## பொருள் எண்–21

கள்ளக்குறிச்சி நகராட்சியில் 2018-2021 (01.04.2018 முதல் 31.03.2021 வரை) ஆம் ஆண்டிற்கான குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி, 27.02.2018 அன்று நடைபெறவுள்ள விளம்பர அறிவிப்பினை, விழுப்புரம் மாவட்ட அளவில் ஒரு தமிழ் நாளிதழில், 10.02.2018 அன்று தினமணி நாளிதழில், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம் அவர்களின் மூலமாக பிரசுரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ. 16,695/-ஐ வழங்கக் கோரி M/s. எக்ஸ்பிரஸ் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தாரின் பட்டியல் எண். VPMTN90012301 நாள். 10.02.2018ல் பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொகையினை M/s. எக்ஸ்பிரஸ் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெம் என்ற நிறுவனத்தாருக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3111 / 2017 / அ3)**

## பொருள் எண்–22

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையம் புணரமைக்கப்பட்டு 07.01.2018 முதல் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளதை, கீழ்க்காணும் தினசரி நாளிதழ்களில் விளம்பரமாக பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பிரசுரம் செய்யப்பட்ட நாளிதழ் | பட்டியல் எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | மாலை மலர் | CUD-D18010040 / 07.01.2018 | 17220.00 |
| 2. | தீக்கதிர் | Advt/566/17-18 / 08.01.2018 | 17500.00 |

மேற்காணும் விபரப்படி உள்ள தினசரி நாளிதழ்களுக்கு பேருந்து நிலையம் திறப்பு விழா தொடர்பான விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டதற்கான பட்டியலில் கண்டுள்ள தொகையினை வழங்கிட தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 424 / 2018 / இ1)**

## பொருள் எண்–23

மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் அவர்களின் கடித எண் 22/செ.ம.தொ/2018 நாள் 13.02.2018ன்படி மாண்புமிகு த மிழக முதலமைச்சர் அவர்கள் பதவுயேற்று ஓராண்டு நிறைவடைந்ததை முன்னிட்டு தமிழக அரசு ஓராண்டு நிறைவு பெற்றதை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் வழியே விளம்பரம் செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கீழ்க்கண்ட நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வரப்பெற்றது அதன் விபரம்

| வ. எண் | பிரசுரம் செய்யப்பட்ட நாளிதழ் | பட்டியல் எண் / நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | மாலை தமிழகம் | MT 0444/2018-19/ 01.04.2018 | 16800 |
| 2. | மக்கள் குரல் | MAB070807603 / 27.03.2018 | 10500 |

மேற்கண்ட பட்டியல் தொகையினை உரிய நிறுவனத்திற்கு செலுத்த மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் இ1/ /2018

| **பொருள் எண்–24** |
| --- |
| கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 12 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு, விசைப்பம்புகள், சிறுமின் விசைப்பம்புகள், இதர மோட்டார்கள் மற்றும் கைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்வதற்கு, 2017-2018-ம் ஆண்டிற்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண். 10/2017 நாள். 28.02.2017ல் ரூ. 10.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது, மேற்கண்ட பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை தற்பொழுது முடிவுறும் தருவாயில் உள்ளது. மேலும், 2018-2019-ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், மேற்படி பணிக்கு தற்போது கூடுதலாக ரூ. 5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)–க்கு தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் விநியோக அவசர, அவசியத்தினை கருதி ஏற்கனவே பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்கள் மூலமே மேற்கொள்ளவும், அதற்கான தொகையினை வழங்கிடவும் அனுமதிக்கலாம்.<br>3. தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>**( ந.க.எண். 268 / 2017 / இ1 )** |

**த□ அலுவல□**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**